**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3777/ஆ5/2023, நாள்.05.02.2023**

......

பொருள் பள்ளிக் கல்வி –தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் – (SIDP) 2.0 – மாவட்ட அளவிலான துவக்க முகாம் நடத்துல் – தேர்தெடுக்கப்பட்ட 10 அணிகளின் மாணவர்கள் மற்றும் வழிகாட்டி ஆசியர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.62955/எம்/இ2/2024, நாள். 02.02.2024

.....

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை மற்றும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் (SIDP) சார்பாக இந்நிதியாண்டில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் இந்த திட்டத்தில் பதிவு செய்து அனைத்து பள்ளிகளிலும் வழிகாட்டி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் தங்களுக்கான கற்றல் பகுதியினை நிறைவு செய்து வருகின்றனர். அணிகள் தங்களது புத்தாக்க கண்டுபிடிப்புகள் (Ideas) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பள்ளி அளவில் சமர்ப்பித்துள்ள கண்டுபிடிப்பிற்கான ஆய்வு இணையதளம் வழியாக நடைபெற்று இதிலிருந்து மாவட்டத்திற்கு 10 அணிகள் தேர்வு செய்யப்பட்டு அந்த அணிகள் தங்களது கண்டுபிடிப்பினை முன்மாதிரியாக (Prototype) உருவாக்க மாவட்ட அளவில் துவக்க முகாம் கீழ்காணும் படி நடைபெறவுள்ள. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 அணிகளின் மாணவர்கள் மற்றும் வழிகாட்டி ஆசியர்கள் (இணைக்கப்பட்டுள்ளது) கலந்துக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு தேவையான செலவுகள் (போக்குவரத்து, உணவு, தங்குமிடம் போன்ற) தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவில் துவக்க முகாம்**
**நடைபெறும் இடம் – அன்னை மீரா பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, அரப்பாக்கம் (சென்னை – பெங்களூரு நெடுச்சாலை) வேலூர் மாவட்டம் – 632 517**
**நாள் – 08.02.2024 (வியாழக்கிழமை) மற்றும் 09.02.2024 (வெள்ளிக்கிழமை)**
**நேரம் – காலை 9.00 மணி முதல்**

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வருகைபுரியும் போது தங்களது கண்டுபிடிப்புகளுக்கான அனைத்து பொருட்களை கொண்டு வரவேண்டும் 08.02.2024 அன்று Mentors guidelines வழங்கப்படும்.
2. 09.02.2024 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தங்களின் கண்டுபிடிப்புகளை காட்சிக்கு உட்படுத்த வேண்டும்.

3. முகாமிற்கு வரும்போது வழிகாட்டி ஆசியர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணாக்கர்கள் தங்களின் Bank Pass Book முதல் பக்க நகல் மற்றும் இரண்டு Passport Size Photo கொண்டுவரவேண்டும்.

வேலூர், அரப்பாக்கம், அன்னை மீரா பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் 08.02.2024 மற்றும் 09.02.2024 அன்று நடைபெறவிருக்கும் புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் (SIDP) சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட 10 அணிகளின் மாணவர்கள் மற்றும் வழிகாட்டு ஆசிரியர்கள் தவறாமல் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசியிர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகள் விவரம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

05.02.24

பெறுநர் –
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)